[1973 மார்ச் 1

அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்தல்

* 205 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்து, அதனைச் செயல் படுத்த தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் அனுப்பிய திட்டத்தினை அரசு ஒப்புக்கொண்டது. தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் தமிழ் நாடு மாநில எண்ணெய்க் கூட்டுறவுச் சம்மேளனத்தினை அமைத்தது. அச் சம்மேளனம் முதன்முதலில் தமிழ் நாட்டில் மூன்று இடங்களில் எண்ணெய் பிழியும் இயந்திரங்களைச் செங்கற்பட்டு மாவட்டத்தில் திம்மாவரத்திலுள்ள நவீன அரிசி ஆலைக்கு அருகிலும், தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை யிலுள்ள நவீன அரிசி ஆலைக்கு அருகிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தாழையூத்திலுள்ள நவீன அரிசி ஆலைக்கு அருகிலும் நிறுவ திட்டமிட்டிருந் தது. கட்டிட வேலைகள், இயந்திரங்கள் தருவித்தல் முதலிய வேலைகள் பட்டுக் கோட்டையில் உள்ள ஆலையில் முன்னேறிக்கொண்டு வருகின்றன. இந்தத் திட்டத்தை ஒன்று அல்லது இரண்டு ஆலைவரையில் நிறுத்திக்கொள்ளும் யோசனைப் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. த. சோனையா : அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கிறார்கள். அப்படி எண்ணெய் எடுத்த பிறகு அதிலிருந்து ஏற்படுகிற கழிவை எதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதன் கழிவை மறுபடியும் மாட்டுத் தீவனம் போன்றவைகளுக்குப் பயன்படுத்தலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தாழையூத்தில் ஒரு ஆலை இருப்பதாகக் கூறினார்கள். அந்த ஆலை இயங்குகிறதா ? அந்த ஆலை வெகு காலமாக மூடிக் கிடந்ததே, அதைத் திறக்க என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் மேற் கொண்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் அவர்கள் கேட்பது அரிசி ஆலைபற்றி. நான் சொன்னது தவிட்டில் இருந்து எண்ணெய் எடுக்கிற ஆலை திட்டத்தில் இருக்கிறது என்று சொன்னேன்.

[1973 மார்ச் 1]

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : இந்த அரிசித் தவிட்டிலிருந்து எடுக்கப் படும் எண்ணெய் ஆகாரமாகப் பயன்படுத்தப்படுகிறதா என்று அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : சோப்புக்கு மட்டும்தான் பயன்படுத்தலாம். ஆகாரத்திற்குப் பயன்படுத்தும் அளவிற்கு அதைப் பண்ணக்கூடாது. ஆலைகள் இருந்தால் அதற்கான வேறு செயல்படுகிற முறை களுக்கு அந்த எண்ணெயைப் பயன்படுத்தலாம்.

திரு. கோவை செழியன் : இந்த அரிசித் தவிட்டிலிருந்து எடுக்கிற எண்ணெயை ரிபைன் செய்தால் அதை ஆகாரத்திற்காகப் பயன்படுத்தலாம். இப்போது பயன்படுத்துகிற நல்லெண்ணெய், கடலெண்ணெய் இவைகளால் ப்ளட் கொலாஸ்ட்டல் ஏற்பட்டு அதன் காரணமாக ஹார்ட் அட்டாக் ஏற்பட்டு திடீர் திடீரென்று பலர் சாகிறார்கள். இந்த ப்ளட் கொலாஸ்ட்டல் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கோவை செழியன் : எப்படி ஒரு வார்த்தையில் கேள்வி கேட்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வியைக் கேளுங்கள். கேள்வியா இது? நீங்கள் பேசிக்கொண்டேயிருக்கிறீர்கள். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கோவை செழியன் : ஒரே வார்த்தையில் எப்படி ஐயா கேள்வி கேட்கிறது? . . .

திரு. எம். சுரேந்திரன் : இந்த அரிசியிலிருந்து வரும் தவிட்டைப் பயன் படுத்தி எண்ணெய் செய்வது போல் அதிலிருந்து வருகிற உமியைப் பயன் படுத்தி—இப்போது மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறதே, மின்சாரத்திற்காக இந்த உமியைப் பயன்படுத்தலாம் என்று சொல்கிறார்களே, அதுபற்றி அரசாங்கம் ஆலோசித்திருக்கிறதா? அனல் மின்சாரம் போல் உமியைப் பயன்படுத்தி ரைஸ் மில்களை ஓட்டலாமே, அதுபற்றி அரசாங்கம் ஆலோசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : மூலக்கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. கேள்வி, அரிசித் தவிட்டில் இருந்து எண்ணெய் எடுத்தல் பற்றியது, அதற்கு பதில் சொல்லியிருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் உமியில்

இருந்தும் மின்சாரம் உற்பத்தி செய்யமுடியுமா என்று கேட்கிருர்கள். அது நிபுணர்களைக் கேட்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்புகள்

(அ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான காலவரையறையை நீட்டித்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. சோ. அழகர்சாமி, திரு. ஏ. ஆர். மாரிமுத்து இவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, 1 முதல் 30 வரையுள்ள மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்களை 2—3—1973 அன்று பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்க வேண்டுமென்பதற்குப் பதிலாக, 3—3—1973 அன்று பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்கவேண்டும் என்று அறிவிக்கிறேன்.

(ஆ) உரிமைப் பிரச்னை ஒத்திவைக்கப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. ஜி. ஆர். எட்மண்ட், திரு. நா. வீராசாமி, திரு. எஸ். முகமது கோதர் முகைதீன் ஆகியோர் சட்டப் பேரவை விதிகளுக்கிணங்க உரிமைப் பிரச்னை கொண்டு வந்திருக்கிருர்கள். அவற்றை நான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறேன். அவை நாளைய தினம் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) நடைமுறைக் கேள்விகள்

(அ) பேரவையில் எம். ஜி. ஆர். கட்சி என்று இருப்பதாகப் பத்திரிகைகள் குறிப்பிடுவது குறித்து

THIRU G. R. EDMUND : Sir, on a point of Order. கடந்த 26—2—1973 அன்று சட்டமன்றத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளை எதிர்த்து இங்கே இருக்கின்ற எதிர்க் கட்சிகளைச் சார்ந்த . . .

MR. DEPUTY SPEAKER : This is not a point of order. பிரிவிலேஜ் மோஷன் கொடுத்து இருக்கிறீர்கள். அது பற்றித்தானே பேசப் போகிறீர்கள் ?